# சென்னை ஐஐடி-யின் 'புதுமை சிந்தனை பாடநெறி' இலவச இணையவழிக் கற்றல் சேர்க்கை தொடக்கம்

**சென்னை, மே 6:** சென்னை ஐஐடி-யின் முன்னோடித் திட்டமான 'புதுமை சிந்தனை பாட நெறி' (மரபுசாரா சிந்தனை) 2026 - ஆம் ஆண்டுக்கான சேர்க்கை தொடங்கியுள்ளது.

சென்னை ஐஐடி-யின் பிரவர்தக் அமைப்பு 'அவுட் ஆஃப் தி பாக்ஸ் திங்கிங் (ஓஓபிடி)' என்ற மரபுசாரா சிந்தனை பாடநெறியை நான்கு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு முன்னோடித் திட்டமாக தொடங்கியது.

பள்ளி, கல்லூரி மாணவர்கள், சிந்தனையாளர்களுக்கான இந்த இலவச இணையவழித் திட்டத்தில் ஆக்கபூர்வமான சிக்கல் தீர்க்கும் திறன், தர்க்க ரீதியான பகுத்தறிவு, கணிதச் சிந்தனை ஆகியவற்றை வளர்ப்பது நோக்கங்களை உள்ளடக்கியது.




கணிதம் மற்றும் தர்க்கத்தின் துணையுடன், கற்பவர்கள் சிக்கல்களை ஆக்கபூர்வமாகத் தீர்க்க உதவும் வகையில் இது வடிவமைக்கப்பட்டது.

இந்த தனித்துவமான இணைய வழிக் கற்றல் பாடநெறியின் 2026-ஆம் ஆண்டுக்கான சேர்க்கைப் பதிவுகளைச் சென்னை ஐஐடி மே 4- ஆம் தேதி தொடங்கியுள்ளது.

இந்த பதிவுக்கான கடைசி தேதி ஜூலை 31 ஆகும்.

ஆர்வமுள்ளவர்கள் இணையதளம் (https://iitmpravartak.org.in/out}of}box}thinking) வாயிலாக பதிவு செய்து கொள்ளலாம் என சென்னை ஐஐடி தெரிவித்துள்ளது.

இந்தப் பாட நெறியில் இது வரை 3,19,536-க்கும் மேற்பட்ட பள்ளி, கல்லூரி மாணவர்கள், பட்டதாரிகள், பணிபுரியும் வல்லுநர்கள், சமூகத்தின் பல்வேறு தரப்புகளைச் சேர்ந்தவர்கள் நிறைவு செய்துள்ளனர் எனவும் ஐஐடி தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

---

# பி.எம்.ஸ்ரீ திட்டத்தில் இணைய தமிழக அரசுக்கு மத்திய அரசு கடிதம்

**சென்னை, மே 6:** மத்திய அரசின் பி.எம்.ஸ்ரீ திட்டத்தை தமிழக அரசுப் பள்ளிகளில் செயல்படுத்துவது தொடர்பாக தமிழக அரசிடம் மத்திய அரசு மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

தேசிய கல்விக் கொள்கை 2020-இன் கீழ், 'பிரதான் மந்திரி ஸ்கூல்ஸ் ஃபார் ரைசிங் இந்தியா' (பி.எம்.ஸ்ரீ) திட்டம் கொண்டு வரப்பட்டது. நாடு முழுவதும் உள்ள 14,500-க்கும் மேற்பட்ட அரசுப் பள்ளிகளை அதிநவீன வசதிகளுடன் மேம்படுத்துதல், மாணவர்களுக்கு நவீன தொழில்நுட்பம், ஆய்வகங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுடன் கூடிய தரமான கல்வியை வழங்குதல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்துக்கான நிதியில் 60 சதவீதத்தை மத்திய அரசும், 40 சதவீதத்தை மாநில அரசும் வழங்கும். பெரும்பாலான மாநிலங்கள் இதில் இணைந்துவிட்டன. ஆனால், தமிழகம், மேற்கு வங்கம் உள்ளிட்ட சில மாநிலங்கள் மட்டும் இதற்கான ஒப்பந்தத்தில் கையொப்பமிடவில்லை.

தேசிய கல்விக் கொள்கையில் மும்மொழிக் கொள்கை இருப்பதால், திமுக தலைமையிலான கடந்த அரசு ஏற்கெனவே பின்பற்றி வரும் இருமொழிக் கொள்கையே போதும் எனக் கூறி இந்தத் திட்டத்தில் இணைய மறுத்துவிட்டது. இதனால், மத்திய அரசு ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்ட (சமக்ர சிக்ஷா) கல்வி நிதிக்காக ஒதுக்கும் ரூ.3,500 கோடியை தமிழக அரசுக்கு வழங்காமல் நிறுத்தி வைத்தது.

இந்த விவகாரம் கடந்த திமுக ஆட்சியில் விஸ்வரூபம் எடுத்தது. மத்திய அரசு நிதி தராவிட்டாலும் நாங்கள் எங்கள் பிள்ளைகளுக்கு தேவையான நிதியை ஒதுக்குவோம் என அப்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

இந்நிலையில், தற்போது மத்திய அரசு மீண்டும் தமிழக அரசுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளது. அதில் பி.எம்.ஸ்ரீ பள்ளி திட்டத்தின் கீழ் பள்ளிகளை மேம்படுத்த உடனடியாக ஒப்பந்தத்தில் கையொப்பமிட வேண்டும் என்று கெடு விதித்திருக்கிறது.

தமிழகத்தில் புதிய அரசு பொறுப்பேற்க இருக்கும் சூழலில் மத்திய அரசு இந்தக் கடிதத்தை எழுதியுள்ளது. புதிதாக அமையவுள்ள அரசு இந்த விவகாரத்தை எவ்வாறு கையாளப் போகிறது? கடந்த திமுக அரசு கையாண்ட வழியிலேயே கையாளுமா? அல்லது ஒப்பந்தத்தில் கையொப்பமிட முனைப்பு காட்டுமா?, நிறுத்தி வைக்கப்பட்ட கல்விக்கான நிதியை மத்திய அரசிடம் இருந்து பெற்றுத் தர என்ன மாதிரியான நடவடிக்கை எடுக்கப் போகிறது போன்ற கேள்விகள் எழுந்துள்ளன.

இதற்கிடையே, புதிய அரசை அமைக்க முனைப்புக் காட்டிவரும் தவெக சார்பில், கல்வித் துறையிடம் இதுவரை மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள், அதனால் பயன் பெற்றவர்கள் குறித்த முழு விவரங்களையும் கேட்டிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.



பூண்டி ஏரியில் குவிந்து வரும் செங்கால் நாரைகள் மற்றும் பல்வேறு வகையான பறவைகள்.

திருவள்ளூர், மே 6: கோடை காலத்தில் நீர் தேடி பூண்டி ஏரியில் செங்கால் நாரைகள் மற்றும் பல்வேறு வகையான பறவைகள் குவிந்து வருகின்றன.

தமிழகத்தில் கோடை காலம் நிலவி நீர் நிலைகளில் நீர் வற்றி வருகிறது. அதனால் பிற நீர்நிலைகளுக்கு செங்கால் நாரைகள் மற்றும் வெளிநாட்டுப் பறவைகள் குவிந்து வருகின்றன. அந்த வகையில் திருவள்ளூர் அருகே உள்ள பூண்டி ஏரியில் போதிய நீர் மற்றும் இரையும் உள்ளதால் வெளிநாட்டுப் பறவைகள் அதிகளவில் குவிந்து வருகின்றன.

அதற்கு கோடை வெப்பம் காரணமாக பறவைகள் இடம் பெயர்வு உள்ளது. கோடை வெப்பத்தால் நீர் நிலைகள் வற்றுவதால், பறவைகள் தண்ணீர் தேடி அலைய நேரிடுகிறது. மேலும் இதுபோன்ற கடுமையான வெப்பத்தை தணித்துக் கொள்ள, நீர் உள்ள இடங்களைத் தேடி, பல பறவைகள் இடம் பெயர்வதும் வழக்கமாகும்.

அதனால் பறவைகளின் தாகம் தணிக்கும் இடமாகவும், இரை தேடும் பகுதியாகவும் பூண்டி ஏரி உள்ளதால் நாரைகள், கொக்குகள் மற்றும் பிற நீர்ப்பறவைகள் குவிகின்றன. அங்கு வெப்பத்தைத் தணித்துக் கொள்வதுடன், தாகத்தையும் தீர்த்துக் கொள்கின்றன.

மேலும், அந்த பறவைகளுக்கு தேவையான உணவும் அங்குள்ளதால் அதிலுள்ள சிறு சிறு மீன்களை இரையாக்கிக் கொள்கின்றன. அதனால் பறவைகள் இத்தகைய நீர்நிலைகளுக்கு வருகின்றன.

கோடை வெயிலால் நீர்வளம் வற்றினாலும், ஏரி போன்ற நீர்நிலைகளில் தண்ணீர் தேங்கி இருக்கும் இடங்களை, பறவைகள் தங்களின் தாகத்தை தணிக்கும் இடங்களாகக் கருதி, அங்கு வருகிறது. பெரும்பாலான வலசைப் பறவைகள் குளிர் காலத்தில் தான் (அக்டோபர் முதல் மார்ச் வரை) வருவது வழக்கமாகும். ஆனால் கோடைக்காலத்தில் வரும் பறவைகள், பெரும்பாலும் உள்ளூர் பறவைகளாகவோ அல்லது தண்ணீரைத் தேடி வரும் பறவைகளாகவோ இருக்கின்றன.

இந்த பறவைகள் ஏரிகளில் கூட்டமாக வந்து வட்டமடிப்பதும், மீன் இரைகளை தேடுவதும் கண்கொள்ளா காட்சியாக உள்ளது. இதை பார்க்க அந்தப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்களும் ஏரியில் குவிந்து வருகின்றனர்.

### தற்சார்பு இந்தியா திட்டம்

# ஐஐடி-களுடன் இந்திய கடல்சார் அறக்கட்டளை புரிந்துணர்வு

திருவொற்றியூர், மே 6: கடல்சார் துறையில் தற்சார்பு இந்தியா திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு மும்பை, சென்னை ஐஐடி-க்கள் மற்றும் இந்திய கடல்சார் பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன், இந்திய கடல்சார் அறக்கட்டளை புரிந்துணர்வு ஒப்பந்தங்களை சென்னையில் மேற்கொண்டது.

மத்திய கப்பல் போக்குவரத்து அமைச்சகத்தின் கீழ் சாகர்மாலா புத்தொழில் புத்தாக்கத் முன்னெடுப்பு திட்டத்தின் அடிப்படையில் இந்திய கடல்சார் அறக்கட்டளை அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

'வளர்ந்த இந்தியா 2047' என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டு 'ஆத்ம நிர்பார்பாரத்'(தற்சார்புஇந்தியா)திட்டத்தை பல்வேறு துறைகளில் மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது. அதன்படி, கடல்சார் துறையில் பல்வேறு புத்தாக்கத் திட்டங்களைச் செயல்படுத்தும் முயற்சிகளில் இந்திய கடல்சார் அறக்கட்டளைச் செயல்பட்டு வருகிறது.

கடல்சார் துறையில் 40-க்கும் மேற்பட்ட திட்டங்களைச் செயல்படுத்தும் வகையில் சென்னை துறைமுகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் சென்னை, மும்பை தொழில் நுட்பக் கழகங்கள் (ஐஐடி) மற்றும் சென்னையிலுள்ள இந்திய கடல்சார் பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை இந்திய கடல்சார் அறக்கட்டளை மேற்கொண்டது.




கடல்சார் துறையில் தற்சார்பு இந்தியா திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக சென்னை, மும்பை ஐஐடி-க்கள், இந்திய கடல்சார் பல்கலை. ஆகியவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்ட இந்திய கடல்சார் அறக்கட்டளை மேலாண்மை இயக்குநரும், சென்னைத் துறைமுகத் தலைவருமான எஸ்.விஸ்வநாதன்.

அந்த அறக்கட்டளையின் மேலாண்மை இயக்குநரும், சென்னை துறைமுகத் தலைவருமான எஸ்.விஸ்நாதனும், ஐஐடி சென்னை சார்பில் தொழில்சார் ஆலோசனை மற்றும் நிதியுதவி ஆராய்ச்சித் துறைத் தலைவர் மனு சந்தானம், கடல்சார் பொறியியல் துறைத் தலைவர் கே. முரளி; மும்பை ஐஐடி சார்பில் கடல்சார் பொறியியல் துறை பேராசிரியர் மனசா ரஞ்சன் பெஹேரா, கடல்சார் பல்கலைக்கழகத்தின் சார்பில் முனைவர் சத்ய நாராயணா மூர்த்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டு பரிமாறிக் கொண்டனர்.

இந்த ஒப்பந்தங்கள் மூலம் இந்திய கடல்சார் துறையில் 40-க்கும் மேற்பட்ட சாகர் மாலா புத்தொழில் புத்தாக்க முன்முயற்சி திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான அடித்தளம் அமைக்கப்பட்டு பணிகள் தொடங்கும்.

அதற்கு ஏதுவாக கடல்சார் புத்தாக்க மையங்கள் ஏற்படுத்தப்படும். கடல்சார் துறையில் மாற்றங்கள், புதிய தொழில்நுட்பங்கள், சவால்கள், நவீனமயமாக்கல் ஆகியவற்றில் தற்சார்பு நிலையை அடைய இந்த ஒப்பந்தங்கள் உதவிகரமாக இருக்கும் என்றார்.

நிகழ்ச்சியில் சென்னைத் துறைமுகம், ஐஐடி-க்கள், இந்திய கடல்சார் பல்கலைக்கழக மூத்த அதிகாரிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.